**குற்றவியல் நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**முன்னிலை: திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.**

**நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர்.**

**2026 - ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் வியாழக்கிழமை**

**STC.No. 216 - 2017**

**CNR.No. TNKI10-000174-2017**

செந்தில் குமார் (வயது 38/2016),
த/பெ. எத்திராஜ்,
Prop M/s. Sun Pipes, பிளாட் எண்.422/1,
ஹோட்டல் சரோவர் அருகில்,
மோரனப்பள்ளி கிராமம், N.H 7,
கிருஷ்ணகிரி பைபாஸ் ரோடு, ஒசூர்,
கிருஷ்ணகிரி மாவட்டம். ... புகார்தாரர்

/Vs/

R.அசோகன் (வயது 35/2016),
த/பெ. ராஜு முதலியார்,
க.எண்.7/84, ரேணுகா இல்லம்,
ஸ்ரீ நகர் II தெரு, டெலிபோன் எக்சேன்ஜ் அருகில்,
ஒசூர் 635 109,
கிருஷ்ணகிரி மாவட்டம். ... எதிரி

**சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021-ம் தேதியிட்ட**

## Roc.No.814/2020/RG/F1-ன் படி வழக்கின் சுருக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | | | Nil |
| 2. | புகார் மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | | | 04.11.2017 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | | | Nil |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச. 251 பிரிவின் கீழ் வினவிய நாள் | | | 30.08.2019 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் விவரம் | | | |
| | குற்றப்பல்வகை மனு எண். | உத்தரவு அனுமதிக்கப்பட்டது / தள்ளுபடி செய்யப்பட்டது | மேல்முறையீட்டு வழக்கு விவரம் | |
| | Crlmp No.1407/24, dt:24.10..2024 | தள்ளுபடி செய்யப்பட்டது | இல்லை | - |
| | Crlmp No.1408/24, dt:24.10..2024 | தள்ளுபடி செய்யப்பட்டது | இல்லை | - |
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம் | | | |
| | சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் | |
| | திரு. செந்தில்குமார் | 29.08.2018 | 31.10.2019 | பு.சா.1 |
| | திரு. அருண் | 08.11.2019 | 08.11.2019 | பு.சா.2 |
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட | | | 11.11.2019 |

| | | |
|---|---|---|
| | நாள் | |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய /ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | --- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவு படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் மற்றும் தீர்வு | --- |

இவ்வழக்கு கடந்த 12.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபொழுது, புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சத்தியநாராயணன். அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.G. கௌரிஷ்குமார் அவர்களும், ஆஜராகியும் இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம், பிரிவு 138-ன் கீழ் காசோலை மோசடி குற்றத்திற்காக எதிரியை தண்டிக்கக்கோரியும், நஷ்ட ஈடு செலுத்தகோரியும், புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2) புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-**

2.1) புகார்தாரரும், எதிரியும் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக நண்பர்கள் என்றும், புகார்தாரர் பிளாட் எண்.400/ஜி, ஒசூர் மெயின் ரோடு, பத்தலப்பள்ளி மார்கெட்

எதிர், ஒசூர் என்ற முகவரில் H.D.P.E & Plythene Pipes ஐ Manufacturing தொழில் செய்து வருவதாகவும், எதிரி பில்டிங் Construction மற்றும் மற்ற தொழில்களும் செய்து வருவதாகவும், மேற்படி புகார்தாரர் தனது வீட்டு வேலைக்காக ரூ.69,00,000/-ஐ M/s Dewan Housing Finance யிடம் இருந்து லோன் வாங்கியதாகவும், மேற்படி எதிரி தனது உடனடி தொழில் தேவைக்காக கடந்த 2017 ம் வருடம் ஜுலை 2 ம் வாரத்தில் புகார்தாரரை அணுகி ரூ.16,50,000/-ஐ கைமாற்று கடனாக கேட்டதாகவும், மேற்படி தொகையை 2 மாதத்தில் திருப்பி தருவதாக எதிரி உறுதியளித்ததன் அடிப்படையில் புகார்தாரர் ரூ.16,50,000/-ஐ கடந்த 28.07.2017 ம்தேதி எதிரிக்கு கொடுத்ததாகவும், மேற்படி தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு ரூ.16,50,000/-க்கு கடந்த 21.09.2017 என்ற தேதியிட்ட M/s. Lakshmi Vilas Bank, Hosur கிளையின் காசோலை எண் 000114 என்ற காசோலையை புகார்தாரருக்கு கொடுத்ததாகவும் புகார்தாரர் வழக்கில் கூறியுள்ளார்.

2.2) மேற்படி காசோலையை புகார்தாரர் தனது வங்கியான M/s. Karur Vysya Bank, Bathalapalli கிளையில் கடந்த 22.09.2017 அன்று வசூலுக்கு தாக்கல் செய்த போது காசோலையானது கடந்த 25.09.2017 ம் தேதியில் Funds Insufficient என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதாகவும், அதன் பின்னர் 07.10.2017 -ம் தேதி புகார்தாரர் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், அதை எதிரி 10.10.2017-ம் தேதி பெற்றுக்கொண்டுவிட்டு, பதில் அறிவிப்பு அனுப்பாமலும், பணத்தை செலுத்தாமலும்

இருந்து வந்துள்ளதாகவும், எனவே எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டுமென்றும் புகார்தாரருக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென்றும் புகார்தாரர் இந்த வழக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளார்.

3) வழக்கின் அனைத்து ஆவணங்கள், புகார்தாரர் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கை மற்றும் குறித்த கால அளவு மற்றும் நீதிமன்ற ஆள்வரை எல்லை ஆகியவற்றை கருத்தில் கொண்ட பின்னர், வழக்கை கோப்பிற்கு எடுக்க முகாந்திரம் இருந்ததால் வழக்கானது 07.11.2017 -ம் தேதி கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, STC எண் வழங்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4) குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 204(3)-ன் படி வழக்கின் நகல்கள் எதிரிக்கு அழைப்பாணையுடன் அனுப்பப்பட்டுள்ளது.

5) இந்த வழக்கு, அழைப்பாணை வழக்கு என்பதால் குற்றச்சாட்டுகள் வனையப்படவில்லை. மாறாக எதிரி மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்திற்காக குற்றம் குறித்து வினவப்பட்ட (Substance of Accusation) போது, பணம் வாங்கவில்லை, புகார்தாரர் பைப் கடை வைத்துள்ளார், நான் கட்டிட தொழில் செய்கிறேன் என்றும், அதனால் எனக்கும் அவருக்கும் பழக்கம், அதனால் நான் பிணையமாக இரு காசோலைகளை அவரிடம் கொடுத்தேன் என்றும், பொய் கேஸ் என்றும் கூறி குற்றத்தை மறுத்ததால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

6) இவ்வழக்கில் புகார்தாரர் செந்தில்குமார் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்

மூலம் பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் திரு.அருண் (கரூர் வைஸ்யா வங்கி, மேலாளர்) என்பவர் பு.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் எந்தவொரு ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**7) புகார்தாரர் தரப்பு சாட்சியின் சுருக்கம்:-**

7.1) புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு தனது சாட்சியத்தில், புகார்தாரரும், எதிரியும் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக நண்பர்கள் என்றும், புகார்தாரர் பிளாட் எண்.400/ஜி, ஒசூர் மெயின் ரோடு, பத்தலப்பள்ளி மார்கெட் எதிர், ஒசூர் என்ற முகவரில் H.D.P.E & Plythene Pipes ஐ Manufacturing தொழில் செய்து வருவதாகவும், எதிரி பில்டிங் Construction மற்றும் மற்ற தொழில்களும் செய்து வருவதாகவும், மேற்படி புகார்தாரர் தனது வீட்டு வேலைக்காக ரூ.69,00,000/-ஐ M/s Dewan Housing Finance யிடம் இருந்து லோன் வாங்கியதாகவும், மேற்படி எதிரி தனது உடனடி தொழில் தேவைக்காக கடந்த 2017 ம் வருடம் ஜூலை 2 ம் வாரத்தில் புகார்தாரரை அணுகி ரூ.16,50,000/-ஐ கைமாற்று கடனாக கேட்டதாகவும், மேற்படி தொகையை 2 மாதத்தில் திருப்பி தருவதாக எதிரி உறுதியளித்ததன் அடிப்படையில் புகார்தாரர் ரூ.16,50,000/-ஐ கடந்த 28.07.2017 ம்தேதி எதிரிக்கு கொடுத்ததாகவும், மேற்படி தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு ரூ.16,50,000/-க்கு கடந்த 21.09.2017 என்ற தேதியிட்ட M/s. Lakshmi Vilas Bank, Hosur கிளையின் காசோலை எண் 000114

என்ற காசோலையை புகார்தாரருக்கு கொடுத்ததாகவும், மேற்படி காசோலையானது புத.சா.ஆ.1 எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.2) புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு மேலும் தனது சாட்சியத்தில், மேற்படி காசோலையை புகார்தாரர் தனது வங்கியான M/s. Karur Vysya Bank, Bathalapalli கிளையில் கடந்த 22.09.2017 அன்று வசூலுக்கு தாக்கல் செய்த போது காசோலையானது கடந்த 25.09.2017 ம் தேதியில் Funds Insufficient என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதாகவும், மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை புத.சா.ஆ.2 எனவும், அதன் பின்னர் 07.10.2017-ம் தேதி புகார்தாரர் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி சட்ட அறிவிப்பானது புத.சா.ஆ.3 எனவும், மேற்படி புத.சா.ஆ.3 சட்ட அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை புத.சா.ஆ.4 எனவும், மேற்படி புகார்தாரர் நிறுவனத்தின் வங்கி கணக்கு பட்டியல் புத.சா.ஆ.5 எனவும், ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டும், பதில் அறிவிப்பு அனுப்பாமலும், பணத்தை திருப்பி செலுத்தாமலும் இருந்து வந்துள்ளதால் எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் எனவும், அவரை தண்டிக்க வேண்டும் எனவும், புகார்தாரருக்கு உரிய நஷ்ட ஈடு வழங்கவேண்டும் எனவும் புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ளார்.

8) புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்த பின்னர் குற்றவியல்

நடைமுறைச்சட்டம், பிரிவு 313 (1) (ஆ)-ன் கீழாக, புகார்தாரர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமான சூழ்நிலைகளை எடுத்துக்கூறி எதிரியிடம் வினவப்பட்டது, நான் பணம் கேட்கவும் இல்லை, அவர் எனக்கு பணம் கொடுக்கவும் இல்லை, செக்கை பணத்திற்காக கொடுக்கவில்லை என்றும், வெற்று காசோலை இரண்டை செக்யூரிட்டிக்காக பைப் வாங்க கொடுத்தேன், சட்ட அறிவிப்பு நான் வாங்கவில்லை, அது மாதிரி எதுவும் வரவில்லை என்றும், பைப் வாங்க செக் கொடுத்தேன், நான் தவறு செய்யவில்லை, பொய் வழக்கு, தனது தரப்பில் சாட்சிகள் உண்டு என்றும் கூறியுள்ளார்.

9) இவ்வழக்கில் எதிரி தரப்பில் எந்தவொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. மேலும் எந்தவொரு சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

10) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

11) **இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் வழக்கு காசோலை பு.த.சா.ஆ.1 ஆனது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதா என்பதும் எதிரியின் மீதான மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தை எதிரி புரிந்துள்ளார் என்பதை புகார்தாரர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளாரா? என்பதேயாகும்.**

12) இவ்வழக்கில் புகார்தாரருக்கு எதிரி ரூ.16,50,000/- (பதினாறு லட்சத்து

ஐம்பதாயிரம்) தரவேண்டும் என்றும், அதற்கு எதிரி ரூ.16,50,000/- க்கு (பதினாறு லட்சத்து ஐம்பதாயிரம்) வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்ததாகவும் அது "Funds Insufficient" என்று திருப்பப்பட்டதாகவும் புகார்தாரர் வழக்கில் கூறியுள்ளார்.

| | | |
|---|---|---|
| காசோலையில் உள்ள தேதி | : | 21.09.2017 |
| காசோலை வசூலுக்கு செலுத்தப்பட்ட நாள்கள் | : | 22.09.2017 |
| காசோலை திருப்பப்பட்ட நாள்கள் | : | 25.09.2017 |
| வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள் | : | 07.10.2017 |
| வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றுக்கொண்ட நாள் | : | 10.10.2017 |
| புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 04.11.2017 |
| புகார் கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 07.11.2017 |

13) மேற்கூறிய சங்கதிகள் அனைத்தையும் கவனிக்கும்போது மாற்று முறை ஆவணங்கள் சட்டத்தின் கால வரையறைக்குள் (Limitation period or Statutory Limitations) இப்புகாரின் வழக்கு மூலமும், ஏனைய பிற சங்கதிகளும் சரியான முறையில் அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது. மேலும் இவ்வழக்கில் புகார்தாரரின் வசிப்பிடம் மற்றும் அவரது வங்கிக் கணக்குள்ள வங்கி, பணபரிவர்த்தனை நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் ஆகியவை Karur Vysya Bank, Bathalapalli கிளை, ஒசூர் நகர காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்டுள்ளது. மேற்படி காவல் நிலையமானது ஒசூர் நகரத்தில் அமைந்துள்ள காரணத்தினால் இப்புகாரானது இந்நீதிமன்றத்தின் ஆளுகை வரம்பிற்குள் (Jurisdiction) அமைந்துள்ளது. இவ்வாறாக, மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கின் காலவரையறை (Limitation

Period), சட்ட நடவடிக்கைகள் மற்றும் வழக்கு மூலம் (Cause of action) சரியான முறையில் அமைந்துள்ள காரணத்தினாலும், இப்புகாரின் சங்கதிகள் இந்நீதிமன்றத்தின் ஆள்வரை வரம்பிற்குள் (Jurisdiction) அமைந்துள்ளதாலும், இப்புகாரானது இந்நீதிமன்றத்தால் புலன் கொள்ளுதலுக்கு (Taking Cognizance) எடுத்துக்கொள்ளப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

14) இவ்வழக்கில் புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பு.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வழக்கு காசோலையைப் பொறுத்து வழக்கு காசோலை எதிரி புகார்தாரருக்கு கொடுக்கவில்லை என்றோ, வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்தை எதிரி செய்யவில்லை என்றோ, எதிரி தரப்பில் மறுத்தளிக்காத நிலையில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139-ன் கீழ் வழக்கு காசோலைகளானது கடனை தீர்க்கும்பொருட்டு எதிரியால் கொடுக்கப்பட்டது என தீர்மானித்து மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. புகார்தாருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானத்தை மறுத்தளிக்கவேண்டிய பொறுப்பு எதிரிக்கு உள்ள நிலையில் அந்த மறுத்தளித்தலை எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதன் மூலமும், சாட்சிகளை விசாரிப்பதன் மூலமும் மற்றும் ஆவணங்களின் மூலமும் மறுத்தலிக்கலாம்.

15) மேலும் இவ்வழக்கில் எதிரியிடம் குற்றம் குறித்து முதல் முறை

வினவப்பட்ட போது **"பணம் வாங்கவில்லை, புகார்தாரர் பைப் கடை வைத்துள்ளார், நான் கட்டிட தொழில் செய்கிறேன் என்றும், அதனால் எனக்கும் அவருக்கும் பழக்கம், அதனால் நான் பிணையமாக இரு காசோலைகளை அவரிடம் கொடுத்தேன் என்றும், பொய் கேஸ்"** என்று கூறியுள்ளார். மீண்டும் 313 (1) (b) ன் கீழாக எதிரிக்கு பாதகமான சூழ்நிலைகளை எதிரியிடம் விளக்கி கேட்ட போது **"நான் பணம் கேட்கவும் இல்லை, அவர் எனக்கு பணம் கொடுக்கவும் இல்லை, செக்கை பணத்திற்காக கொடுக்கவில்லை என்றும், வெற்று காசோலை இரண்டை செக்யூரிட்டிக்காக பைப் வாங்க கொடுத்தேன், சட்ட அறிவிப்பு நான் வாங்கவில்லை, அது மாதிரி எதுவும் வரவில்லை என்றும், பைப் வாங்க செக் கொடுத்தேன், நான் தவறு செய்யவில்லை, பொய் வழக்கு, தனது தரப்பில் சாட்சிகள் உண்டு**" என்றும் கூறியுள்ளார்.

16) வழக்கு எதிரி தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் இருக்கும் போது இவ்வழக்கின் புகார்தாரர் எதிரி காசோலை தொகையை புகார்தாரரிடம் செலுத்திவிட்டதாகவும், எதிரிக்கு எதிராக வழக்கை மேல் நடத்த விருப்பம் இல்லை என்றும் மனு தாக்கல் செய்துள்ளார். எனவே வழக்கு காசோலையைப் பொறுத்து எதிரி, புகார்தாரர் நிறுவனத்திற்கு சட்டப்படியாக செலுத்த வேண்டிய கடன் மற்றும் கடப்பாடு எதுவும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, இப்புகாரை தள்ளுபடி செய்தும், குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 255 (1)-ன் கீழ் அவரை விடுதலை

செய்தும் தீர்ப்பளிக்கிறது.

17) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இல்லாததால் அது குறித்த எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**புகார்தாரர் தரப்பு சாட்சிகள்:**

1) பு.சா.1 - திரு. செந்தில்குமார் - புகார்தாரர்

2) பு.சா.1 - திரு.அருண் (கருர் வைஸ்யா வங்கி, மேலாளர்)

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| 1) | 21.09.2017 -ம் தேதியிட்ட ரூ.16,50,000/- (000114) க்கான Lakshmi Vilas Bank வங்கி காசோலை (எண்ணிக்கை 1) - அசல் | பு.த.சா.ஆ.1 |
| 2) | 25.09.2017 -ம் தேதியிட்ட காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை (எண்ணிக்கை 1) - அசல் | பு.த.சா.ஆ.2 |
| 3) | 07.10.2017-ம் தேதியிட்ட வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய சட்ட | பு.த.சா.ஆ.3 |

| | | |
|---|---|---|
| | அறிவிப்பு - அலுவலக நகல் | |
| 4) | சட்ட அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை - அசல் | பு.த.சா.ஆ.4 |
| 5) | புகார்தாரர் நிறுவனத்தின் வங்கி கணக்கு பட்டியல் - கணினி நகல் | பு.த.சா.ஆ.5 |

**எதிரி தரப்பு சாட்சிகள்:இல்லை**

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:இல்லை**

ஒம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**குறிப்புகள்**:

1. எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.
2. வழக்கு முடிவடைந்ததை பற்றி புகார்தாரருக்கு தெரிவிக்கப்பட்டது.